பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

மலர்: 19 ஐப்பசி 2 ஜு:ஹஜ் 5 இதழ் 277-
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 17-11-77

லாலா சோப்

புதுப்பொலிவுடன் புதிய முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றன.

இன்றே வாங்கிப் பாவியுங்கள்.

லாலா சோப்
அச்சுவேலி

வடக்கு—கிழக்கில்

## இன்று கடும் காற்றும் மழையும இருக்கும்!

(கொழும்பு)

இன்று அதிகாலை தொடக்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடுங் காற்றுடன் மழை பெய்யுமென்று கொழும்பு வளிமண்டல ஆய்வு நிலயம் அறிவித்துளளது.

இலங்கையின் கிழக்குக் கரையிலிருந்து சுமார் 200 மைல் தொலைவில் புயல் உருவாகியிருப்பதாகவும் இது கிழக்கு வடக்குப் பிரதேசங்களைப் பாதிக்கலாமென்றும அறிவிக்கப்பட்டுளளது. யாழ்பபாணத்திலிருந்து அம்பாந்தோட்டைவரை கடல் கொந்தளிப்பாக இருக்குமென்றும அறிவிக்கப்பட்டது

இதேசமயம் இன்று தமிழ் நாட்டில் பாம்பனுக்கும் நாகபட்டணத்துக்குமிடையில் புயல் கடலைக் கடக்குமென்றும் இதனல தமிழ்நாட்டில் பெருமழை பெய்யுமென்றும் இந்திய வானொலி அறிவித்துளளது. வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள, புயல் மேலும் தீவிரமடையுமென்றும அச்செய்தி கூறியது.

அச்சுவேலி ப. நோ. கூ. சங்கக் கொள்ளை

# இளைஞர் மூவருக்கும் தலா ரூ.50 ஆயிரம் பிணை

## மாவட்டத்தை விடுத்து வெளியில் செல்லவும் தடை

### விசாரணை 28-ம் திகதி

(யாழ்ப்பாணம்)

**அச்சுவேலி பல நோக்குக்கூட்டுறவுச்சங்கக்கொள்ளை வழக்கில் எதிரிகள் மூவரும் தலா 50,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.**

இவர்கள் யாழ்ப்பாணமாவட்டத்திற்கு வெளியில் செல்லக்கூடாதென்றும், ஒவ்வொருவாரமும் திங்கள், வியாழன் ஆகியநாட்களில், யாழ். மேல்நீதிமன்றத்தில் பதிவாளரிடம் எதிரிகள் தங்கள் வரவைப்பதிவுசெய்துகொள்ளவேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் எதிரிகள் மூவரும் நேற்று ஆஜர்செய்யப்பட்டனர்.

இவ்வழக்கில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைஞர்களான நாராயணன் அருமைச்சந்திரன் (29), கனகராசா ரமணகரன் (16), தவராஜசிங்கம் உதயணன் (18 வயது) ஆகியோர் அச்சுவேலிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இவ்வருடம் செப்டம்பர் மாதம் 12-ம் தேதி சட்டவிரோதமாகக் கூட்டம்கூடி ப. நோ. கூ. சங்கக் காசாளரிடம் 40 ஆயிரம் ரூபா கொள்ளையடித்தாகவும், பொது நோக்குடன் கொள்ளையடியத்தாகதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான ஆர். பி. தம்பிரத்தினம், எஸ். யோகநாதன் கனகமனோகரன், கே. பி எஸ். வரதராசா, எஸ். கே மகேந்திரன், ந. நகுலசிகாமணி ஆகியோர் ஆஜரானார்கள்.

அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினர்.

### சட்டத்தரணி கோரிக்கை

எதிரிகளை ஒவ்வொரு திங்களும், வெள்ளியும்; வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலயத்திற்குச்சென்று தங்கள் வரவைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என நீதிபதி கூறிய போது சட்டத்தரணி எஸ். யோகநாதன் எதிரிகள் பொலிஸ் நிலயம் செல்ல விரும்பவில்லையென்றும், அவர்

(6-ம் பக்கம் பார்க்க)

## இவர்களுக்கே ரூபா 50 கிடைக்கும்

(கொழும்பு)

போதுமான வருமானம் இல்லாதவர்களுக்கு வழங்கப்படவிருக்கும் 50 ரூபாய் உதவிப் பணம் 18 வயதுக்கும் 40 வயதுக்குமுட்பட்டவர்களுக்கே வழங்கப்படவிருக்கிறது.

இதுபற்றி நேற்றுக் கூடிய அரசாங்கத் தரப்பு ஆட்சி மன்றக் குழு முடிவுசெய்தது. (ம)

## வரவு - செலவுத் திட்டத்தை கூட்டணி எதிர்க்கும்

(கொழும்பு)

அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்ப்பதெனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆட்சிமன்றக் குழு முவுடிசெய்துள்ளது.

நிதியமைச்சரின் வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் நாளை வெள்ளிக்கிழமை தேசிய அரசுப்பேரவையில் ஆரம்பமாகவிருக்கிறது.

எதிர்க்கட்சியின் சார்பில் திரு. அமிர்தலிங்கம் விவாதத்தை ஆரம்பித்துவைப்பார். (ம)

## சிறிமா-காமினி தேர்தல் வழக்கு தள்ளுபடி

(கொழும்பு)

முன்னாள் பிரதமரும் அத்தனகலைத் தொகுதி எம். பி யுமான திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு எதிராகத் தாக்கல்செய்யப்பட்ட தேர்தல் ஆட்சேபனை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சரும் நுவரெலியா மஸ்கெலியா முதலாவது எம். பி. யுமான திரு. காமினி திசநாயக்காவுக்கு எதிரான தேர்தல் ஆட்சேபனை வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி திரு. கே. எப். ஏ. சூசா இந்த இரண்டு வழக்குகளையும் கடந்த திங்களன்று தள்ளுபடிசெய்து தீர்ப்புவழங்கினர்.

திருமதி பண்டாரநாயக்காவுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட வழக்குகளுக்கான பிணைப் பணம் 22 ஆயிரம் ரூபாவாக இருக்கும்போது வழக்காளி 20 ஆயிரம் ரூபாவையே செலுத்தியுள்ளாரென்றும் திரு காமினி திசநாயக்காவுக்கு எதிரான வழக்கின் பிணைப்பணமான 12 ஆயிரம் ரூபாவுக்குப் பதிலாக வழக்காளி 10 ஆயிரம் ரூபாவையே செலுத்தியுள்ளார் என்றும் பூர்வாங்க ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டன.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி இம்மனுக்கள் முறையான விதத்தில் தாக்கல்செய்யப்படவில்லையென்று இவ்வழக்குகளைத் தள்ளுபடிசெய்தார். (இ)

## தேனீர்—கோப்பி விலை குறையாவிடில் தண்டனை

(கொழும்பு)

அரசாங்கம் சீனியின் விலையை 5 ரூபாவிலிருந்து 3 ரூபாவாகக் குறைத்ததையடுத்து கடைகள், ஹோட்டல்களில் தேனீர், கோப்பி ஆகிய வற்றின் விலைகள் குறைக்கப் படவேண்டுமென்றுநிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விலைக் குறைப்பை மேற்கொள்ளத் தவறும் ஹோட்டல், கடைச் சொந்தக்காரர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப் படுமென்றும் திரு. மெல் கூறினர். (இ)

## உள்ளூராட்சி தேர்தல் மார்ச்சில்

(யாழ்ப்பாணம்)

வரும் மார்ச் மாதத்திலேயே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறும் என்று இப்பொழுது தெரிய வருகின்றது.

அரசாங்க ஆட்சிமன்றக்குழு நேற்று இதுபற்றி முடிவு எடுத்தாகவும் அறியப்படுகின்றது. (ம)

## ஆசைத்தம்பிக்கு பிணை

சென்னை, நவ. 16

திருமதி இந்திரா காந்திக்கு எதிராகக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டதினல் காவலில்வைக்கப்பட்டிருந்த லோகசபை உறுப்பினர் திரு. ஆசை தம்பி நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

பட்ஜட் ஸ்பெஷல்! நிதி அமைச்சரின் அறிவிப்பைத் தொடர்ந்து பொதுமக்கள் நன்மை கருதி, காப்பி, இனிப்புவகை, ஐஸ்கிறீம் விலைகளை உடனடியாகக் குறைத்துள்ளோம்.

றிக்கோ ஹோட்டல்

RICOH

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 464

7694

## கோட்டு விற்பனவு விளம்பரம்

M B 215

1. செல்லையா சதாசிவம், 2. பெண் தங்கம்மா இருவரும் 47, கச்சேரி நல்லூர் ரோட், யாழ்ப்பாணம்

வழக்காளி

எதிராக

சின்னத்தம்பி கந்தசாமி 167/3 1ம் ஒழுங்கை அரசடி வீதி, வண்ணார்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம்.

எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டில் இல. M. B. 215வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1977ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 4000/-ம் 20-8-76 தொடக்கம் 14-12-76 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுபடும்வரை 9வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 510-09 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் சுண்டுக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு இறை மதிபன்குளம் புலமும் மறு பிரிவுகளும் நில. பர. 4 இதில் மேற்குப்புறமாக நில. பர இரண்டும் (2) செய்பயிர் வான்பயிர்களும் அதற்குரியவைகள் அனைத்தும். இதற்கு எல்லை கிழக்கு இதன் மிகுதி ஆதனம் வடக்கு ரோட்டு மேற்கு சின்னத்தம்பி மார்க்கண்டுவின் ஆதனம் தெற்கு சரவணை தம்பிப்பிள்ளையின் ஆதனம்.

சி. சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்

தொல்புரம்,
24-9-77. 7686

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B 14654

1 குமாரவேலு கந்தையாவும் பெண்
2. சுந்தரமும் இருவரும் காரைநகர்

வழக்காளி

எதிராக

1. சுப்பிரமணியம் தியாகராசாவும் பெண்
2. வாலாம்பிகையும் இருவரும் இல. 202/2, நாவலர்வீதி யாழ்ப்பாணம்

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 14654-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1977ம் வருடம் மார்கழி மாதம் 15ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 13,730/-ம் 28-11-74 தொடக்கம் 31-7-75 வரைக்கும் ரூபாய் 10,000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 640/08 ம் செலவில் ரூபா 200/-ம் முதலில் ரூபா 5250/-ம் கொடுபட்டதை நீக்கி,

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை 'வண்ணான் தோட்டமும் மாணிக்கத் தோட்டமும் அல்லது மாணிக்கன் தோட்டம்' நில. பர. 2ம் குளி 16½யும் வீடும்கிணறும். வான்பயிர் செய்பயிர்களும் இதன் எல்லை கிழக்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் ஆதனமும் அன்னசத்திரத்தின் ஆதனமும், வடக்கு ஒழுங்கை முகப்பும் சுப்பிரமணியம் தியாகராசாவுக்கும் பெண் வாலாம்பிகைக்குமுரியவாதனம் மேற்கு மயிலுவின் உரிமையாளருக்கும் மறுபேருக்குமுரியவாதனம். தெற்கு பொன்னையா செட்டி செல்லையாவினுதனம் இதடங்கலும்.

ஜே. ஏ. எட்வேட்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை,
11-11-77. 7690

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB/ 15010

1. வேலுப்பிள்ளை கனகசிங்கமும் பெண்
2. நகுலேஸ்வரியும் ரெம்பிள்ரோட், யாழ்ப்பாணம்

வழக்காளி

எதிராக

1. வயித்திலிங்கம் ஆனந்தராசாவும் பெண்
2. ஸ்கந்தமலரும் இல. 46/1, 1ம் ஒழுங்கை, பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB/15010ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1977ம் வருடம் மார்கழி மாதம் 16ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 2850/-ம் 29-8-75 தொடக்கம் 10-3-77 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 452/35ம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை 'பள்ளவயல்' நெ. பர. 9ம் குளி 5ம் இதில் நிந்தமாக நெ. பர. 5ம் இரு சின்னக்கடைகள் அறைகளும் எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு காலஞ்சென்ற சுப்பிரமணியம் கனகசபை பெண் நாகம்மாவினுதனம். மேற்கு கந்தர் பரமுவினுதனம். தெற்கு சின்னத்தம்பி பொன்னையாவினுதனம், இதடங்கலில் சொரியலாய் அரைப்பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்

ஜே. ஏ எட்வேட்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை
12-11-77 7691

## கேள்வி விளம்பரம்

### கிளிநொச்சிப் பட்டணம்

கிளிநொச்சி சந்தை மைதானத்தில் இரண்டு ஆட்டிறைச்சிக்கடைகளும் இரண்டு மாட்டிறைச்சிக் கடைகளும், பரந்தன் சந்தை மைதானத்தில் ஒரு ஆட்டிறைச்சிக்கடையும், ஒரு மாட்டிறைச்சிக் கடையும் அமைத்து 1-1-1978 தொடக்கம் 31-12-78 வரைக்கும் கட்டுப்பாட்டு விலைக்கு இறைச்சி விற்பனை செய்யும் உரிமை கோரி அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இவ்வலுவலகத்தில் கேள்விப் பிணைபணமாக ரூபா 100/-ம், பத்திரப்பணமாக ரூபா 10/-ம் செலுத்தியதின் பெயரில் வழங்கப்படும் பத்திரத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ந் திகதி பிற்பகல் 2-00 மணி வரை கிளிநொச்சிப் பட்டணத்தின் விசேட ஆணையாளராகிய என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 6-12-77 நண்பகல் 12 00 மணி வரை இவ்வலுவலகத்தால் வழங்கப்படும். பத்திரப் பணம் ரூபா 10/- திருப்பித் தரப்படமாட்டாது. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி,
11-11-77. 7688

## விசேட ஆணையாளர் அலுவலகம்.

### கிளிநொச்சிப் பட்டணம் கிளிநொச்சி.

## கிளிநொச்சி உப மின் நிலையத்திற்கு மின்மானி அறை கட்டுதல்

மேற்குறிப்பிட்ட வேலைக்கு 29-11-77 12 மணி வரை அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன. இதற்குரிய பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் ரூபா 10/-ம் பிணைப்பணமாக ரூபா 100/-ம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இப்பத்திரங்களை 28-11-77 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களின் உறையில் இடது பக்க மேல் மூலையில் "கிளிநொச்சி உப மின் நிலையத்திற்கு மின்மானி அறை கட்டுதல்" என எழுதப்பட்டு விசேட ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சிப் பட்டணம், கிளிநொச்சி என்றுவிலாசமிடப்பட்டுஅனுப்பப்படுதல் வேண்டும்.

மேற்கொண்டு விபரங்களை அலுவலக நேரத்தில் வேலை அத்தியட்சகரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி,
8-11-1977. 7687

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## ஊர்காவற்றுறைப் பட்டினசபை

## கேள்விப் பத்திர அறிவித்தல்

கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள விடயங்களுக்கு பொறிபிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை இரு பிரதிகளில் 30-11-77 நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

### அட்டவணை

1. கடைகள் குத்தகை

1. ஆட்டிறைச்சிக் கடை இல: 1.
2. மாட்டிறைச்சிக்கடை இல: 2, 3, 4.
3. கருவாட்டுக்கடை இல: 5.

11. 1978-ம் ஆண்டுக்குத் தேவையான கல், மண் ஆகியன விநியோகித்தல்

வைப்புப் பணமும் கேள்விப் படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 29-11-77 நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்வி வைப்புப்பணமும், படிவக்கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

எந்த ஒரு காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரத்தினை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ பட்டினசபை விசேட ஆணையாளருக்கு உரிமையுண்டு.

மேல் விபரங்களை இந்த அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். சாள்ஸ் பொன்கலன்,
விசேட ஆணையாளர்,
பட்டினசபை,
ஊர்காவற்றுறை.

பட்டினசபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை.
15-11-77. 7689

## காரைநகர் ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு விற்பனை

மேற்படி சங்கத்தில் உப்பு, புளி தவிர்ந்த 5000 வெற்றுச் சாக்குகள்வரை கேள்விப்பத்திர மூலம் விற்பனைசெய்வதற்கு இருக்கின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் 23-11-77க்கு முன்னதாக பதிவுத்தபாலில் தங்களுடைய சராசரி விலையைக் குறிப்பிட்டு தலைவர், காரைநகர் ப. நோ. கூ. சங்கம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கூடிய விலைக்கு விண்ணப்பித்தவருக்கு வெறுச் சாக்குகள் வழங்கப்படும். அவர் எமது அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமைக்குள் முழுப்பணத்தையும் செலுத்தி எடுத்துக்கொள்ளவேண்டும்.

ஆ. அருளம்பலம்
பொதுமுகாமையாளர்
16-11-77 7697

## காரைநகரில் திருக்கல்யாணவிழா

(காரைநகர்)

காரைநகர் கிழவன்காடு கந்தசுவாமி கோவிலில் இன்று தேவயானை திருமணவிழாவும் நாளை வள்ளி திருமண விழாவும், நாளை மறுதினம் சனிக்கிழமை சுவாமி கிராமப் பிரவேசமும் நடைபெறும்

## வரிவிளம்பரம்

### சேவை

கிளிநொச்சிப்பகுதியில் பனம் விதை நாட்டி மரம் உண்டாக்க விரும்புபவர்கள் கிளிநொச்சி தேசியப்பேரவை உறுப்பினர் திரு. ஆனந்தசங்கரி அவர்களிடம் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்ப்பாணம் 'மில்க்வைற் தாபனத்தார்'' அறியத்தருகின்றார்கள்.
7695

பனம்விதைகளை நட்டுப் பனையபிவிருத்தி செய்ய விரும்பும் அன்பர்களுக்கு வவுனிக்குளம், பாண்டியன்குளம், துணுக்காய்ப் பகுதிகளில் 18-11 77 வெள்ளிக்கிழமை பனம்விதை விநியோகம் செய்கின்றோம். தேவையானோர் முன்னரே தொடர்புகொள்ளவும். ''மில்க்வைற்'', த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.
7696

### கல்வி

G. C. E. A/L விஞ்ஞான, வர்த்தக கலை வகுப்புக்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும், விசேட பட்டதாரிகளாலும் நடாத்தப்படுகின்றன. விரும்பிய பாடங்களை எடுப்பதற்கும், மீட்டல் வகுப்பில் பங்குகொள்ளவும் வசதி உண்டு. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 22, இராமையா செட்டியார் ஒழுங்கை, ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
7651

### CLASSES

I. C. M. A. (A&B) May 1978 exam professional stage I. Chartered Preliminary A C C A, I A A Institute of Bankers. Weekend clsses commencing 19-11-77. Time 1-30 p. m. Jaffna Education Centre, No. 22, Ramiah Chettiar Lane, Hospital Rd, Jaffna. Education Centre, Jaffna.
7683

## அடிமை நிலை வருமாம்

[கொழும்பு]

அரசாங்கத்தால் அமைக்கப்படவிருக்கும் சுதந்திர வர்த்தக வலயம் பாரிய வெளிநாட்டுக் கடனுக்கு இலங்கையை அடிமையாக்கும் நிலைக்கு இட்டுச் செல்லுமென கொழும்பு தேர்ஸ்டன் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்க 15 வது ஆண்டு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கூட்டம் ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கத் தலைவர் திரு. எஸ். ஆரியவன்ச தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் வெளிமாவட்டங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

[கே. உ]

## ஆண்டு முடிவுக்குள்

[திருகோணமலை]

மின்சார விநியோகத்தை நகரவிஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் 1957-ம ஆண்டு தொடங்கப்பட்ட திருகோணமலையில் அன்புவழிபுரம் என்னும் கிராமத்திற்கு இவ்வருட முடிவிற்குள் மின்சார விநியோகம் செய்யப்படவிருக்கிறது.

மின்சார விநியோகத்திற்காகிய கம்பங்கள் அன்புவழிபுரத்தின் பிரதான வீதியான அடிகளார் வீதியில் நாட்டப்பட்டிருக்கின்றன.

துரிதப்படுத்தும் முகமாக திருகோணமலை நகரவிசேட ஆணையாளர் திரு. வெற்றிவேலு தனியார் ஸ்தாபனமொன்றுடன் உத்தியோகபூர்வமாக ஒப்பந்த மொன்றை செய்துள்ளார்

# எகிப்திய அதிபருக்கு அமெரிக்கா ஊடாக இஸ்ரேல் பிரதமர் அழைப்பு

## ஜோர்டான், சிரியா, லெபனன் தலைவர்களையும் அழைக்கிறார்

ஜெருஸலம், நவ. 16

மத்திய கிழக்கு சமாதானம் குறித்து பேச்சு வார்த்தை நடத்துவதற்காக இஸ்ரேலுக்கு வருமாறு எகிப்திய ஜனாதிபதி ஜனாப் அன்வர் சதாத்துக்கு இஸ்ரேலியப்பிரதமர் திரு. பெகின் முறைப்படி அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் ஊடாக இந்த உத்தியோக பூர்வ எழுத்துமூலமான அழைப்பு நேற்று விடுக்கப்பட்டது.

ஜோர்டான், சிரியா, லெபனன் ஆகியநாட்டுத்தலைவர்களையும் திரு. பெகின் சமாதானப்பேச்சு வார்த்தைக்கு அழைத்துள்ளார்.

திரு பெகினின் இந்தஅழைப்புக்கு இஸ்ரேலிய பாராளுமன்றம் நேற்று அங்கீகாரம் அளித்தது.

மத்திய கிழக்கு சமாதானம் குறித்து பேச்சு நடத்துவதற்கு இஸ்ரேலிய அரசு முறைப்படி அழைப்பு விடுத்தால் தாம் இஸ்ரேலுக்குச் செல்லத்தயாராக உள்ளதாக எகிப்திய அதிபர் ஜனாப் சதாத் அண்மையில் அறிவித்திருந்ததை அடுத்தே திரு பெகின் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

திரு. பெகின் இந்த அழைப்பை இஸ்ரேலிலுள்ள அமெரிக்கத் தூதுவரிடம் கையளித்த வேளை, ஜனாப் சதாத் எகிப்திலுள்ள அமெரிக்கத் தூதரைச் சந்தித்து உரையாடினார்.

### முன் நிபந்தனை விதிக்கமாட்டேன்

இஸ்ரேலில் நடைபெறவுள்ள உத்தேச பேச்சுவார்த்தைகளுக்குத் தாம் எதுவித முன் நிபந்தனையும் விதிக்கப்போவதில்லை என்று ஜனாப் சதாத் தூதுவரிடம் தெரிவித்தார்.

### குதூகல வரவேற்பு

ஜனாப் சதாத் இஸ்ரேலுக்கு விஜயம் செய்யும் போது இஸ்ரேலிய மக்கள் அவருக்கு குதூகல வரவேற்பு அளிப்பார்கள் என்றும் அண்டைநாட்டுத்தலைவர் ஒருவருக்கு அளிக்கப்படும் சகல மரியாதைகளும் ஜனாப் சதாத்துக்கு அளிக்கப்பட்டு சிறப்போடு வரவேற்கப்படுவாரென்றும் திரு பெகின் பாராளுமன்றதில் தெரிவித்தார்.

### இராணுவ மரியாதை

ஜனாப் சதாத் இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது அவருக்கு, திரு. பெகினுக்கு வலது பக்கத்தில் இருக்கை ஒதுக்கப்படுமென்றும் அங்கு எகிப்தியக்கொடி பறக்க விடப்படுவதுடன் அவருக்கு இராணுவமரியாதை அளிக்கப்படுமென்றும் ஜெருஸலம் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

# "வானொலிச் செய்திகளில் எதிர்க்கட்சியினருக்கும் சமவாய்ப்பு"

புதுடில்லி, நவ. 16

"ஜனதாகட்சிஆட்சியில் ஒரு போதும் மக்கள்தொடர்புசாதனங்கள்கட்சிப்பணிகளுக்காகப் பயன் படுத்தப் படவில்லை".

இவ்வாறு தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. எல். கே. அட்வாணி நேற்று லோக சபையில் தெரிவித்தார்.

நெருக்கடி நிலை அமுலிலிருந்த போது தகவல் அறிவிப்பு சாதனங்கள் முறைகேடாகப் பயன் படுத்தப்பட்டன என்ற குற்றச் சாட்டுத் தொடர்பான விவாதத்தின் போதே திரு. அட்வாணி மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த 5 மாத காலத்திலும் ஆகாஷ்வாணி ஒலிபரப்பிய செய்தி அறிக்கைகளில் எதிர்க்கட்சியினரின் செய்திகளுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது என்றும் அமைச்சர் கூறினார். (இ)

## இளவரசி ஆனுக்கு ஆண்குழந்தை

லண்டன், நவ 16

பிரிட்டிஷ் இளவரசி ஆன் நேற்று ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றுள்ளார்.

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத்தின் முதலாவது பேரப்பிள்ளையான இக்குழந்தை பிரிட்டிஷ் அரசின் 5 வதுவாரிசாகும்.

இக்குழந்தைக்கு எவ்வித பட்டங்களும் வழங்கப் படமாட்டாது என்றும் செல்வன் பிலிப்ஸ் என்றே அழைக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டது.

# "கைத்தொழில்துறைவரை சங்கங்கள் பணிபுரிய வேண்டும்"

(மட்டுவில்)

'இந்த நாட்டில் ஒரு ஐ. நா. சங்கம் தனது 35-வது ஆண்டைக் கொண்டாடுவது ஒரு சாதனையாகும். ஆனால் சங்கங்கள் தமது ஆண்டு விழாக்களைத் தொடர்ந்து கொண்டாடினால் மட்டும்போதாது. சங்கங்கள் இலாப நிதியைப் பல துறைகளிலும் பரவவிட்டு, நல்ல கைத்தொழில் சாலைகள், பண்ணை விவசாயங்கள் ஆகியவற்றை அமைத்து, ஆயிரமாயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க முன்வரவேண்டும்.'

இவ்வாறு சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன் கூறினார்.

திரு. க. சரவணமுத்து தலைமையில் நடைபெற்ற கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த ஐக்கிய நாணய சங்கத்தின் 37-வது ஆண்டு பொதுக் கூட்டத்தில் பேசும்போதே அவர் இவ்வாறு சொன்னார். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

இந்த சங்கம் கடந்த காலங்களில் ஒழுங்காக இயங்கிவந்துள்ளது போற்றற்குரியது. சங்கம் இந்தநாட்டின் பொருளாதாரத்தை, கலை, கலாச்சாரத்தை, பொதுநலத்தை, நூல் நிலையங்கள், முதியோர் கல்வி போன்ற தொண்டுகளுடன், கைத்தொழில் பேட்டைகளை அமைத்தும், பண்ணை விவசாயங்களை அமைத்தும் இன்னும் பல துறைகளிலும் இங்குள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டும். இதன்மூலம் நாட்டின் சுபீட்சம், பொருளாதாரம் உயர்வடைய முடியும்' என்றார்.

செல்வி துஷ்யந்தி பாராஜசிங்கத்தின் வில்லிசை 'சீதா கல்யாணம்' என்ற நிகழ்ச்சியும் இடம் பெற்றது. (உ)

# புயல் நிவாரணபணிகளுக்கு ஒருலட்சம்ரூபா அன்பளிப்பு

## மொரார்ஜி எம். ஜி. ஆருக்கு அனுப்பினார்; பலியானோர் தொகை 217 ஆக அதிகரிப்பு

சென்னை, நவ. 16

தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காகஇந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் ஒருலட்சம்ரூபாவை தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரனுக்கு அனுப்பியுள்ளார்.

உடனடியாக புயல்நிவாரண வேலைகளைக் கவனிக்குமாறும் தமிழ்நாட்டு மக்களின் அவல நிலைகண்டு தாம் வருந்துவதாகவும் திரு. மொரார்ஜி தேசாய் திரு. இராமச்சந்திரனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### வெள்ளக்கொடுமை நீங்குமுன்...

வெள்ளக்கொடுமையிலிருந்து மக்கள் மீளுமுன்புயலின் கொடுமைக்கு அவர்கள் ஆளாகி விட்டார்கள் என்றும் திரு. தேசாய் கவலை தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி அனுதாபம்

புயலால் இன்னலுற்ற தமிழ் நாட்டுமக்களுக்கு ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி, உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் ஆகியோர் தமது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளனர்.

### பலியானோர் தொகை 217 ஆக அதிகரிப்பு

தமிழ்நாட்டில் புயலுக்குப் பலியானோர் தொகை 217 ஆக அதிகரித்துள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. (இ)

## மத்திய அமைச்சர் நேரில் சேதங்களை மதிப்பிடுவார்

தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல் சேதங்களை மதிப்பிடுவதற்காக மத்திய எரிபொருள் அமைச்சர் திரு. பி. இராமச்சந்திரன் நாளைவியாழக்கிழமை தமிழ்நாடு வருகிறார்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி மன்றத்தலைவர் திரு எஸ். பீ. சோமசுந்தரம் தலைமையில் சென்ற குழு ஒன்று, அண்மையில் பிரதமரைச்சந்தித்து தமிழ் நாட்டு புயல் சேதங்களை நேரில் மதிப்பிடுவதற்கு ஓர் அதிகாரிகள் குழுவை அனுப்புமாறு கேட்டதை அடுத்தே திரு. இராமச்சந்திரன் தலைமையிலான இக்குழு அனுப்பப்படுகிறது.

### தி. மு. க. வினர் தந்தி

இதே வேளையில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்குமாறும் புயல்சேதங்களை நேரில் பார்வையிடுவதற்கு ஓர் அதிகாரிகள் குழுவை தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்குமாறும் தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் பிரதம மந்திரியை அவசரத் தந்திமூலம் கேட்டுள்ளனர். (இ)

## சூறாவளிக்கு 40 பேர் பலி

மணிலா, நவ. 16

பிலிப்பைன்ஸில் நேற்று வீசிய சூறாவளிக்கு 40 பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

40ஆயிரம்பேர் தமது வீடுகளை இழந்துள்ளனராம். (இ)

## சுக்ளா மறுப்பு

புதுடில்லி, நவ. 16

முன்னாள் தகவல்ஒலிபரப்புத் துறைஅமைச்சர் திரு. வி. சி. சுக்ளா ஷா கமிஷன் முன்னிலையில்சாட்சியளிக்க மறுத்துள்ளார்.

இத்தகவலை நீதிபதி திரு. ஷா நேற்றைய விசாரணையின் போது தெரிவித்தார். (இ)

## கருணாநிதியின் கோரிக்கை

சென்னை, நவ. 16

புயலால் பாதிக்கப்பட்ட தமிழ்நாடு, புதுச்சேரி மக்களுக்கு உடன் நிவாரணம் அளிக்குமாறு தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதி சிறையிலிருந்து பிரதமர் திரு மொரார்ஜி தேசாயை அவசரத் தந்திமூலம் கேட்டுள்ளார்.

நிதிமந்திரி திரு. எச். எம். பட்டேலுக்கும் திரு. கருணாநிதி தந்தி அடித்துள்ளனர். (இ)

## தமிழகம் செல்கிறார்

(சுழிபுரம்)

சிவத்தமிழ் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அடுத்தமாதம் 24ம் திகதி முதல் 26ம் திகதிவரை திருக்கோயிலில் நடைபெறும் சமயவிழாவில் கலந்து கொள்வதற்காக தமிழகம் செல்லவுள்ளார். (அ)

## பொதுசன அபிப்பிராயம்பற்றி யு.எஸ்.ஆய்வாளர்

வாஷிங்டன், நவ. 16

தேர்தல், கம்பியூட்டர், நேரடி அஞ்சல், டெலிவிஷன் போன்ற வசதிகளும் தருவி ஆராயயும் நிபுணர்களும் இருந்தும் நவீன அமெரிக்க அரசியல் வாழ்க்கையில் பொதுசன அபிப்பிராயத்துக்குச் சிறப்பான இடம் இருந்துவருகிறது

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் சிரேஷ்ட பொதுசன அபிப்பிராய ஆய்வாளரான டாக்டர் பெர்னட் ரெஷ்கோ இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

நான்கு வாரகால ஆசியச் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு இம்மாதம் கொழும்பு வந்துள்ள டாக்டர் ரெஷ்கோ வாஷிங்டனில் தமது பயணத்தைத் தொடங்கும்போது அளித்த ஒரு பேட்டியின்போதே இந்தக் கருத்தை வெளியிட்டார்.

கொலம்பியாப் பல்கலைக்கழகத்தின் பத்திரிகைத்துறைப் பீடத்தைச் சேர்ந்த முன்னாள் பேராசிரியரும் "நியூஸ்மேக்கிங்"-செய்திதயாரிப்பு-என்ற நூலின் ஆசிரியருமான டாக்டர் ரெஸ்கோ இலங்கையில் அரசாங்க அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், அறிஞர்கள் ஆகியோருடன் அமெரிக்கப் பொதுசன அபிப்பிராயமும் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையும் பற்றிக் கலந்துரையாடினார். (இ)

## சீருடைகள் கிடைக்கவில்லை

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அரசாங்க மருந்துக் கலவையாளர்களுக்கு 1977ம்ஆண்டிற்கான சீருடைகள் இதுவரை வழங்கப்படவில்லையாம்.

இவ்வருடம் முடிவதற்கிடையில் இச் சீருடைகளை வழங்குமாறு வலியுறுத்தி அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ் கிளைச் செயலாளர் திரு. என். எம். கந்தசாமி யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகரை வேண்டியுள்ளார். (அ)

## காரைநகரில் மணிவாசகர் விழா

(காரைநகர்)

காரைநகர் மணிவாசகர் சபையினர் வருடந்தோறும் ஈழத்துச்சிதம்பரத்தில் நடத்திவருகின்ற மணிவாசகர்விழா இம் முறை மிக்வும் கோலாகலமாக நடைபெறவிருக்கிறது. திருவெம்பாவைக் காலத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவை அண்ணாமலைப்பல்கலைக்கழக விரிவுரையாளர் வித்துவான் தொல்காப்பியச் செல்வர் கு. சுந்தரமூர்த்தி ஆரம்பித்து வைத்து நான்கு நாட்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

இவ்விழாவை முன்னிட்டுக் காரைநகரிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு ஒரு சமய பாடப் பரீட்சை நடத்தப்பட்டது. 7 பிரிவாக நடத்தப்பட்ட இப்பரீட்சைக்கு 1327 மாணவர்கள் தோற்றினர். ஒவ்வொருபிரிவிலும் கூடுதலான புள்ளிகளைப் பெறும் முதல் மூவருக்கும் விழாவின் போது பரிசில்கள் வழங்கப்படும். (அ)

# திருமலை மாவட்டத்தில் ஆசிரியர் பற்றுக்குறை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சில சிங்களப் பாடசாலைகள் உட்பட பல பாடசாலைகளில் விஞ்ஞானம் புதிய கணிதம், பௌதிகம் போன்ற பாடல்கள் போதிக்கப் போதியளவு ஆசிரியர்கள் இல்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இறக்கக் கண்டி சிங்களப் பாடசாலை, கிவுலுக் கடவெலப் பாடசாலைபோன்றவற்றில் ஆசிரியர் பற்றுக்குறை இருந்து வருகிறதாம்.

திருகோணமலை நகரஎல்லைக்குள் புனித சூசையப்பர் கல்லூரியில் உயர்தர வகுப்புகளுக்கு பௌதிகம் போன்ற பாடல்கள் போதிக்க ஆசிரியர் இல்லாக்குறை உள்ளதாம்.

இந்நகர எல்லைக்குள் உள்ள சிங்கள கனிஷ்ட வித்தியாலயம், சிங்கள மகா வித்தியாலயம் உட்பட சில தமிழ்ப் பாடசாலைகளிலும் இப்பற்றுக் குறை நிலவுகிறதாம் இதே வேளை கந்த மலவாப் பாடசாலையில் உதவி அதிபர் ஒருவர் மாத்திரமே கடமை புரிந்து வருகின்றார். இவரின் கீழ் கடமை புரிந்த இரு ஆசிரியர்களை அண்மையில் மாற்றிவிட்டார்கள் என்றும் அவர்களின் இடம் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை என்றும் இதனால் அப்பாடசாலை உதவி அதிபரே சகல கருமங்களையும் சமாளிக்க வேண்டிய பக்குவத்தில் உள்ளார் என அறிய வருகின்றது.

இவ்வாசிரியர் பற்றுக்குறை காரணமாக அவ்வப் பாடசாலை மாணவ மாணவிகள் பெரிதும் கவலைப்படுகிறார்கள். இதனால் தங்கள் பாடங்களை எவ்வண்ணம் அடுத்து இலாகாவினர் நடத்தவிருக்கும் பரீட்சைகளை எழுதுவது இவர்கள் என ஏங்கித் தவிக்கிறார்கள்.

இதைவிட பாடசாலைகளில் பயன் படுத்தம்பட்டு வரும் வெண்கட்டி காகிதம் போன்றவை தற்சமயம் இலாகவினால் வழங்கப்படுவதில்லை என்றும் அதனை அவ்வப்பாடசாலையினரே தங்களுக்குக் கிடைக்கும் வசதிப் பணத்தில் வேண்டிப்போட வேண்டிய நிலையிலுள்ளார்கள் என்றும் புகார் செய்யப்படுகிறது. (உ)

திருமலை

# விவசாயிகளுக்கு 27 உழவுயந்திரங்கள் ஒதுக்கீடு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திற்கென 27 உழவு இயந்திரங்கள் அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எறிக் டீ சில்வாவினால் பெர்மிட்மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

உழவு இயந்திரங்களுக்குத் தேவையான சகல உதிரிப் பாகங்கள் யாவும் இனிமேல் இம்மாவட்டத்திலும் வான் சேவை மூலம் விற்கப்படும்.

இதுவரையில் வயலில் வேலை செய்துகொண்டிருக்கும் சமயம் உதிரிப்பாகம் ஏதாயினும் பழுதடைந்தால் அல்லது உடைந்தால் அதனை எடுத்துக்கொண்டு திருகோணமலைக்கோ அல்லது பிற இடங்களுக்கோ ஓடவேண்டிய நிலையில் விவசாயிகளுக்கு இந்த நடமாடும் வான் சேவை பெரும் வரப்பிரசாதமாக அமையுமென நம்பப்படுகின்றது. (உ)

# வவனியா கல்வி வசதிகள்: $3\frac{1}{4}$ லட்ச ரூபா ஒதுக்கீடு

(வவனியா)

வவனியா கல்விப்பகுதிக்கு ரூபா 3லட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீடு வவனியா அரசாங்க அதிபரினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின்கீழ் செய்யப்பட்டுள்ளது.

இதனால் பல பாடசாலைகளில் புதிய கட்டிடங்களும், பல பாடசாலைகளுக்கு தளபாடங்களும் கிடைக்கவிருக்கிறது என கல்விப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ)

## திருமலையில் வெங்காயச் செய்கை பாதிப்பு?

(திருகோணமலை)

கடந்த வருடங்களிலும்பார்க்க நடப்பு வருடப் பெரும்போக வெங்காயச் செய்கை பயனளிக்க மாட்டாது என்று கருதப்படுகிறது.

இதற்கு போதிய அளவு விதை வெங்காயம் திருகோணமலை நகரத்திலும் அதன் சுற்றுப் புறக்கிராமங்களிலும் இல்லாததே காரணமாகும்.

இங்குள்ள கமக்காரர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்திலுள்ள கமக்காரர்களையே எதிர்பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

திருமலையில்தற்சமயம் விதை வெங்காயம் அந்தர் ஒன்றுக்கு 450 ரூபா விலை போனாலும் தமது தேவைக்கு ஏற்ப போதியளவு விதைகாய் பெறமுடியாது கஷ்டப்படுகிறார்கள். சொற்ப விதைகாய் வாங்குவதாயிருந்தாலும் இவ்விடம் தரகர் மூலமாகவே போகவேண்டியிருக்கிறது எனக் குறைபடுகின்றனர்.

வீட்டுச் சமையல் தேவைக்கான வெங்காயமே தற்சமயம் இவ்விடம் இறாத்தல் ஒன்று 6 ரூபாவுக்கு விற்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## பாலர்கழக விளையாட்டுவிழா

(உடுப்பிட்டி)

கரவெட்டி லூர்த்துமாதா பாலர்கழகத்தின் வருடாந்த விளையாட்டுவிழா கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடைபெற்றது. இவ்விளையாட்டு விழாவில் பருத்தித்துறைக் கட்டளைக் குரவர் அருட்திரு. கிறிஸ்தோப்பர் அடிகள் கலந்துகொண்டார்.

இவ்விளையாட்டு விழாவைப் பாலர் கழக இயக்குநர் சங். சகோதரி அல்பீனாவும். ஆசிரியை செல்வி சாந்தியும் ஒழுங்குசெய்திருந்தனர். (அ)

## தென்பகுதியிலிருந்து தென்னங்கன்றுகள்

(சங்கானை)

குறுகிய காலத்தில் நல்ல வருவாயைக் கொடுக்கக்கூடிய சிறந்த இன தென்னங்கன்றுகள் சங்கானை ப.நோ.கூ. சங்கத்தால் வரவழைக்கப்படவுள்ளன.

தென்பகுதியிலிருந்து வரவழைக்கப்படவுள்ள 5,000 கன்றுகளும் சங்க அங்கத்தவர்களுக்குமட்டும் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளைப் பொதுமுகாமையாளர் திரு. வி.கந்தசாமி செய்துள்ளார். (அ)

சேவை நேரத்தில்

# அதிபர்கள், ஆசிரியர்களுக்கு பொலிஸ்பாதுகாப்பு

## அவசியமாயின் அளிக்க நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

கல்லூரிகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களின் நலன்கருதி அவசியம் ஏற்படும் பட்சத்தில் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்படும்.

இந்த ஏற்பாடுபற்றி அறிவிக்கும் சுற்றுநிருபங்களை கல்வித் திணைக்களம் சகல பிராந்திய அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களும் சம்பளத்தை வங்கிகளில் இருந்தோ தபால் நிலையங்களிலிருந்தோ எடுத்துச் செல்லும் போது அவர்களுக்கு அரசாங்கம் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கோரும் தீர்மானத்தை இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக்கிளை நிறைவேற்றியிருந்தது.

வங்கிகளில் தபால் நிலையங்களில் ஆசிரியர்களின் சம்பளங்களை வாங்க அதிபர்கள் மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

இதுகுறித்து பல ஆசிரிய சங்கங்கள், தேவையேற்படும் பட்சத்தில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவேண்டுமென கல்வியமைச்சை வற்புறுத்தி வந்தது.

ஆசிரியர்களும் அதிபர்களும் தேவையேற்படும் போது அண்மையிலுள்ள பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டால். பொலிஸ்பாதுகாப்பு வழங்கப்படும் என இந்த சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ளது. [கெ-அ]

## வழி மறித்துத் தாக்கினராம்

(பண்டத்தரிப்பு)

கடந்த தீபாவளித் தினத்தன்று தமது சைக்கிளில் வீதியால் போய்க்கொண்டிருந்த ஒருவரை, இருவர் குடிபோதையில் வழிமறித்துத் தாக்கினர்களாம். தாக்குதலுக்குள்ளான அளவெட்டி தெற்கைச் சேர்ந்த வைரமுத்து சுப்பையா என்பவர் தலையில் பலத்த காயங்களுடன் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் அதே இடத்தைச் சேர்ந்த துரைசிங்கம் என்பவரைக் கைது செய்து றிமாண்டில் வைத்துள்ளனர். மற்றுமொரு சந்தேக நபரான விக்கிரா என்பவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

### மற்றொரு புகார்

அளவெட்டியைச் சேர்ந்த கதிரவேலு சபாபதி என்பவர் வீதியால் சென்றுகொண்டிருக்கும்போது அவரைத் தாக்கிப் படுகாயம் விளைவித்ததாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. இத்தாக்குதல் தொடர்பாகச் சுன்னாகம் பொலிசார் சந்தேகத்தின் பேரில் அதே இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கனகரத்தினம் என்பவரைக் கைது செய்துள்ளனர். (அ)

## கந்தபுராண விரிவுரை பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

கந்தசஷ்டித் திருவிழாவையொட்டி நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மாவினால் தொடர்ந்து நிகழ்த்தப்பெற்றிவரும் கந்தபுராண விரிவுரை இன்று முடிவடைகிறது. மாவைக் கந்தன் ஆலயத்தில் இவர் தொடர்ந்து நடாத்தி வந்த 'கந்தன் கருணை' தொடர்விரிவுரை நேற்றுப் பூர்த்தியானது. (அ)

## திறந்து கிடக்கும் தபால்பெட்டி

[வவனியா]

வவனியா ஸ்டேஷன் றோட்டில் உள்ள வயிரப்புளியங்குளம் சந்தியில் உள்ள தபால்பெட்டியில் கடிதம் போடுவதற்கு பொதுமக்கள் தயங்குகிறார்களாம்.

தபால் பெட்டி பூட்டப்படாமல் திறந்திருப்பதே இதற்குரிய காரணமாகும். இதன் காரணமாக கடிதங்கள் போடுவதற்கு பஸ்நிலையத்திற்கும் தபாற் கந்தோருக்கும் செல்ல வேண்டியுள்ளதென்றும் இது பற்றி தபால் கந்தோர் அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா? என்றும் பொதுமக்கள் கேட்கிறார்கள். [உ]

# இவர்கள்வேலைவாய்ப்புபற்றி உடுப்பிட்டி எம். பி. ஆராய்கிறார்

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பாவனையாளர் பிரதிநிதிகளாகப் பணிபுரிந்து வேலை இழந்துள்ள 24 பணியாளர்களுக்கும் மீண்டும் வேலை வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுப்பதுபற்றி உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் ஆராய்ந்துவருகின்றார்.

இது சம்பந்தமாக பிரஸ்தாப பணியாளர்களைக் கொண்ட தூதுக்குழுவொன்று உடுப்பிட்டி எம்பியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியது அப்போது உடுப்பிட்டி எம். பி. இவ்வூழியர்களுக்கு மீண்டும்வேலைவாய்ப்பு வழங்குவதுபற்றித் தாம்வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதியளித்தாரென்று இத்தூதுக் குழுவிற்குத் தலைமைவகித்த திரு. செ கனகேந்திரம் தெரிவித்தார். [அ]

# கொட்டாஞ்சேனை கொலை வழக்கில் எதிரி விடுதலை

[கொழும்பு]

கொட்டாஞ்சேனைக் கொலை வழக்கில் ஒன்பது நாள் விசாரணையின் பின் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஜே. ஆர். எம். பெரேரா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 74-ம் ஆண்டு ஏப்ரல் 9ம் திகதி கொட்டாஞ்சேனையில் எஸ். சந்திரசேகரன் என்பவரைக் கொலை செய்ததாக எம். ஐ. ராஜகோபால் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஜி.ஜி. பொன்னம்பலம் [ஜூனியர், சட்டத்தரணி எஸ் என். ராஜாவின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசு தரப்பில் சட்டத்தரணி டென்சி அரசகுலரத்ன வழக்கை நடத்தினார். [க அ]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB/14825

1. நாகரத்தினம் நரேந்திரன், வட்டுக்கோட்டை.

வழக்காளி

எதிராக

1. நாகையா சிவப்பிரகாசம், இல: 14, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B/14825-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1977-ம் வருஷம் மார்கழி மாதம் 14-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 7525/-ம் 21-4 75 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 18% வீத வட்டியும் காட்டுச் செலவு ரூபாய் 592/25ம் இதில் ரூபா 175/- வழக்காளியின் முன்னைய சட்டத்தரணிக்கு செலவால் கொடுபட்டது

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "கடைத்தோட்டம்" நி பர. 4ம் குளி 4.35ம் 16-8 1968இல் உத்தரவு பெற்ற உலாந்தா C. C. குமாரசாமியினால் 440 Aஇல் தயாரிக்கப்பட்ட படத்தின்படி துண்டு 1. இதில் மேற்குப் பக்கமாக அறுதி விற்கப்பட்ட நி. பர. 2 போக மிகுதி நி. பர. 2ம் குளி 4.35ம் இந்த நி. பர. 2ம் குளி 4·35க்கும் எல்லை கிழக்கு பிறவுன்றோட் முதலாம் ஒழுங்கை, வடக்கு S. வேலுப்பிள்ளையின் உரிமையாளரின் ஆதனம், மேற்கு வேலுப்பிள்ளை இராசையாவின் ஆதனம், தெற்கு பொது ஒழுங்கை குறித்த படத்தில் 4ம் துண்டு. இதடங்கலும்.

D 368/146ல் பதிபப்பட்டது.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை,
7-11-77.

ஜே. ஏ. எட்வேட்,
கொமிஷனரும்
விலைமதிப் பாளரும்
7692

கடைசி வாரம்
ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
மூத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

வெலிங்டன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

விடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
(யாழ்.நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

# கலைஞரை விடுதலை செய்யக்கோரி யாழ். இளைஞர் கிளர்ந்தெழுவர்

(யாழ்ப்பாணம்)

தமிழக அரசினால் கைது செய்யப்பட்டு சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ள திராவிடமுன்னேற்றக் கழகத்தலைவரும் முன்னாள் தமிழக முதலமைச்சருமான கலைஞர் மு. கருணாநிதியை விடுதலை செய்யக்கோரி யாழ்ப்பாணம் வாழ்தமிழ் இளைஞர்கள் கிளர்ந்தெழ வுள்ளனர்.

தமது எதிர்ப்பைக் காட்டும் வகையில் இளைஞர்கள் ஊர்வலம் ஒன்றையும் பொதுக்கூட்டம் ஒன்றையும் பெரிய அளவில் நடாத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2- மணியளவில் திருநெல்வேலிச் சந்தியில் இருந்து ஆரம்பமாகவிருக்கும் இவ் ஊர்வலம் பலாலி வீதி ஊடாக தமிழர் விடுதலைக்கூட்டணி தலைமையலுவலகத்தை அடைந்து கலைஞரை விடுதலை செய்யக்கோரும் தீர்மானம் ஒன்றினை இலங்கையில் உள்ள பாரத தூதரிடம் ஒப்படைக்கப்படும் பொருட்டு தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான திரு. ஏ. அமிர்தலிங்கத்திடம் ஊர்வலத்தினர் கையளிப்பர்.

இதனையடுத்து ஊர்வலம் கோவில்வழி வீதிவழியாக நல்லூர் கல்யாண மண்டபம் வரை சென்று அங்கு பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெறும்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் கோவை நந்தன், சிவதாஸான், புவனேந்திரன் ஆகியோர் கவனித்து வருகின்றனர்.

கலைஞர் சதிக்குற்றச்சாட்டின் பேரில் இம்மாதம் 26ம் திகதி வரை தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது தெரிந்ததே. (கா-உ)

றியோ (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
மாலாசிங்க -"சன்ஜே
தில்லகி
(ஹிந்தி)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

ஐந்தாவது வெற்றி வாரம்!
ராஜா- யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின்
அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா
நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
[பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்]



## திருநெல்வேலிக் கொலைவழக்கு:

# 1-ம் எதிரிக்கு 5 வருடம்; மூவர் விடுதலை

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலிக் கொலை வழக்கில் 1 ம் எதிரிக்கு 5 வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. மற்றும் மூன்று எதிரிகளும் தலா 1000 ருபா பொறுப்பில் 3 வருட நன்னடத்தைப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 75 ம் ஆண்டு செப்டம்பர் 21 ம் தேதி திரு

(6-ம் பக்கம் பார்க்க)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

## யாருடையது?

முத்திரைச்சந்தியைச் சேர்ந்த தாஸன் என்பவரால் நல்லூர் கோவிலுக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட காரைநகரைச் சேர்ந்த ஒருவரின் அடையாள அட்டை ஒன்று ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
முத்துராமன்-சுஜாதா
வாழ்ந்து காட்டுகிறேன்

யாழ். வின்ஸர் வெண் திரையில்
18-11-77 வெள்ளி முதல் குதூகல ஆரம்பம்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
தொடர்ந்து பாலசந்தரின் பல வெற்றிப் படங்களை அள்ளி வழங்கிய
யாழ். வின்ஸர் ஸ்தாபனத்தாரின்
மற்றுமோர் வெற்றிச் சித்திரம்
★ கமலஹாஸன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ★ ஸ்ரீதேவி
★ ஒய். விஜயா ★ அநுபாமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
K பாலசந்தரின்
மூன்று முடிச்சு
தயாரிப்பு: R. வெங்கட்ராமன், R. M. சுப்பையா
இசையமைப்பு: M. S. விஸ்வநாதன்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. பாலசந்தர்.

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m. only
Sean Connery, B. B. in
SHALAKO
(Western color Scope)

French Film Festival
Daily at 4-45 7 & 9-30 P. M. only
18-11-77 WOMAN AT HER WINDOW
21-11-77 MONSIEUR PAPA
23-11-77 COUSIN COUSINE

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
கே. பாலசந்தரின்
சொல்லத்தான் நினைக்கிறேன்
(புதியபிரதி)

இன்று மட்டும் சத்யம்

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

### மணிவாக்கு

"அவசரப்படுபவர் திகைத்துக் கலங்குவர். ஆறி அவதானமாகக் காரியங்களைச் செய்வோர் அமைதியாகவிருப்பர்" இதனுண்மையை ஒவ்வொரு கணமும் காண்பர்.

—காந்திமகான்.

ஈழநாடு
The Eelanaadu

## நம்பிக்கை தரும் திட்டம்

எதிர்பார்க்கப்பட்டது போல் புதிய அரசாங்கத்தின் புதிய நிதிஅமைச்சரின் வரவு-செலவுத் திட்டம் புரட்சிகரமானதாகவே அமைந்துள்ளதென்று சொல்லலாம்.

கடந்த காலத்தில் ஆட்சிக்குவந்த அரசாங்கங்களெல்லாம் விலைவாசியைக்குறைப்போம், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவோம் என்று கூறிவந்துள்ளன.

வேலையில்லாதிருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தேடிக்கொடுப்பதற்கென தேர்தல் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் 'தொழில் வசதி வங்கி' அமைக்கப் போவதாக நிதி அமைச்சர் அறிவித்திருப்பதுடன் வேலையற்றோருக்கு நிவாரண உதவியாக மாதம் ஐம்பது ரூபாய் அலவன்ஸ் வழங்கப்படுமென்றும் அறிவித்திருப்பது முக்கியமான பிரச்னைக்குத் தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கையை மக்கள் மனதில் தோற்றுவித்துள்ளது.

"இலவச அரிசி வேண்டாம்" என்றும் நமது நாட்டில் சில ஊர்வலங்களில் கோஷம் எழுப்பப்பட்டதுமுண்டு. ஆனாலும் அரசியலாகிவிட்ட அரிசியில் கைவைப்பதற்கு எவரும்துணியவில்லை.

மாதம் முன்னூறு ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்கள் தொடர்ந்தும் இலவச அரிசி மற்றும் பங்கீட்டுப் பொருள்களைப் பெற்றுவரும் அதேசமயம் முன்னூறு ரூபாய்க்கு அதிகமான வருமானம் பெறுபவர்களுக்கு இலவச அரிசியும் பங்கீட்டுப்பொருள்களும் இருக்கமாட்டாது. இதற்காக சகலருக்கும் ஐம்பது ரூபாய் வரையிலான சம்பள உயர்வு அளிக்கப்படவிருக்கிறது.

முன்னூறு ரூபாய்க்கு அதிகமான மாத வருமானம் பெறுவோர் நமது நாட்டில் மிகப் பெரும்பான்மையினராகவே இருப்பர். இதனால் இலவச அரிசிக்குப் பெருமளவில் ஆடிவு காணப்படும். விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்குமுகமாக நெல் உத்தரவாத விலை உயர்த்தப்பட்டிருப்பதால் அரிசி விலையும் அதிகரிக்கலாம். மாதம் முன்னூறு ரூபாய் வருமானம் பெறுபவருக்கும் அறுநூறு ரூபாய் பெறுபவருக்கும் ஒரே நிலையென்பது பல குடும்பங்களில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

'பீக்ஸ்' திட்டம் ஒழிக்கப்பட்டதும் இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு தனியார் துறையினரும் இறக்குமதி செய்வதற்கு வசதி அளிக்கப்பட்டிருப்பதும் அத்தியாவசியப் பொருட்களின் மொத்த வியாபார வரி ஒரு சதமாக் குறைக்கப்பட்டிருப்பதும் அத்தியாவசியப் பொருட்கள் மலிவாகவும் தட்டுப்பாடு இல்லாமலும் கிடைப்பதற்கு வழிவகுக்குமென்று எதிர்பார்க்கலாம்.

மாவும் பாணும் பழைய விலையில் கிடைக்கவிருப்பதும் மா தட்டுப்பாடில்லாமல் எங்கும் பெறலாமென்று அறிவிக்கப்பட்டிருப்பதும் பெரும் ஆறுதல்.

சீனியின் விலை குறைக்கப்பட்டிருப்பதால் தேநீர் மற்றும் இனிப்புப் பண்டங்களின் விலையும் குறைந்தே ஆகவேண்டும். இது பற்றி நிதியமைச்சர் எச்சரிக்கை விடுத்திருப்பது பயனளிக்குமென்று நம்பலாம்.

நம்பிக்கை அளிக்கும் அடிப்படையுடன் புதிய வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கமும் அதிகாரிகளும் பொதுமக்களும் இவற்றைச் சரிவரச் செயல்படுத்துவதிலும் ஒத்துழைப்பதிலுந்தான் இவற்றின் வெற்றி தங்கியிருக்கிறது.

## 'நாலு' பேர் பட்ஜட் சொல்கிறார்கள்

['பட்ஜட்' யோசனைகள் பற்றி 'நாலுபேரை' கேட்டோம். அவர்கள் தெரிவித்த கருத்துக்கள், இங்கு சுருக்கமாக வெளிவருகிறது.]

யாழ். ஸ்டான்லி வீதி வர்த்தகர்கள் சங்கத் தலைவர் திரு. ஜே. எம். சபாரத்தினத்தை முதலில் சந்திக்கின்றோம்.

### "நல்ல யோசனைகள்; ஆனால்......"

'பொதுவாகக் கூறப்போனால் பட்ஜட் யோசனைகள் வரவேற்கக்கூடியவைதான். ஆனால், 300 ரூபா மாதச் சம்பளம் பெறுவோரின் இலவச அரிசியை ரத்துச் செய்வது வரவேற்கக்கூடியதொன்றல்ல! 300 ரூபா என்பதை ஐநூறு ரூபாவும் அதற்கு மேலும் என்று திருத்தினால் நல்லது என்பது எனது அபிப்பிராயம்' என்று ஆரம்பித்த அவர்;

மாதம் 300 ரூபாவுக்கு அதிகமாகச் சம்பளம் பெறுவோரினது இலவச அரிசியை ரத்துச் செய்வதன்மூலம், இச்சம்பளகாரர்கள், கடுமையாகத் தாக்கப்படுவார்கள். ஐந்து குழந்தைகள் உள்ள ஒரு குடும்பஸ்தர் எவ்விதமாகச் சமாளிக்க முடியும்? அவரது பிள்ளைகள் பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்டிருந்தால் சீனியும் கிடைக்காது! கமக்காரர்கள், விவசாயிகள், மற்றும் கூலிவேலை செய்வோர் மாதம் சுமார் 500 ரூபாவரை சம்பாதிக்கின்றார்கள். ஆனால் நிதி அமைச்சரின் யோசனைப்படி இவர்கள் பாதிக்கப்பட முடியாது. காரணம், இவர்கள் மாதச் சம்பளம் பெறுவோரல்ல. வேலையற்றோருக்கு 50 ரூபா விசேடபடி வழங்குவதன்மூலம் இளைஞர்கள் பேலும் மோசமாகக் கூடாது. தமிழ்ப்பகுதிகளில் ஏராளமான இளைஞர்கள் வேலையற்றிருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் தொழில் தேடித்தரும் நிலையத்தில் பதியப்படவேண்டும். இதன்மூலம் சரியான புள்ளிவிபரத்தை அரசுக்குக் காட்ட வேண்டும். 'பீக்ஸ்', சி ஆர். ஏ முறைகளை ரத்துச்செய்தது வரவேற்கக்கூடியது. ஏனென்றால் 'பீக்ஸ்' முறை, வழக்கமான விகிதம் என்றும்; கறுப்புச் சந்தை விகிதம் என்றும் வேறுபட்டிருக்கிறது. 'பீக்ஸ்' முறை ஒழிக்கப்படுவதன்மூலம் நமது ரூபாவுக்கு அரிய மதிப்பு கிடைக்க இடமுண்டு. தொழில் வாய்ப்புக்களை கொடுக்க அரசு பல திட்டங்களை வகுத்திருப்பது வரவேற்கத்தக்கது. சிறு கைத்தொழில் வளர்ச்சியிலும் அரசு அக்கறை எடுத்திருப்பதும் பாராட்டத்தக்கது. ஐம்பது ரூபா சம்பள உயர்வு, 300 ருபாவுக்கு அதிக சம்பளம் பெறுவோரின் இலவச அரிசி வெட்டு

கே. ஹி. எம்.

ஆகிய விஷயத்தில் மாற்றம் கொண்டு வருவது நல்லது. ஏற்கனவே வரிச்சுமைகளினால் பாதிப்புற்ற நடுத்தர மக்களை மேலும் பளுவினால் அழுத்துவது கூடாது' என்று கருத்து வெளியிட்டார்.

### 'மேலும் மேலும் பாதிப்பா?

மக்கள் வங்கியில் ஏழாம் தர ஊழியராகக் கடமையாற்றும் எஸ். வாமதேவனை சந்தித்து, எப்படி பட்ஜட்' என்று கேட்டோம்.

'நாங்கள் பணக்கார வர்க்கம் அல்ல. ஆனால், 300 ரூபாவுக்கு அதிக சம்பளம் பெறுவோரின் இலவச அரிசியையும் 12 வயதுக்கு மேற்பட்டோரினது பங்கீட்டு சீனியையும் ரத்துச் செய்வது வரவேற்கக்கூடியதல்ல. இது எம்மை மேலும் மேலும் பாதிக்கவே செய்யும்! இளைஞர்களுக்கு 50 ரூபா 'சும்மா' வழங்குவது அவர்களை மேலும் மோசமாக்கும் என்பதே எனது கருத்து. இதன் மூலம் இளைஞர்கள் மேலும் 'கெட்டு'ப் போகவே முடியும். விசேடப் படி வழங்கும் 'முறை'யை அரசு நன்கு பரிசீலனை செய்து உபயோகமான முறையில் கொடுக்க வேண்டும். அரிசி வெட்டை 500 ரூபாவுக்கு அதிகமாக சம்பளம் பெறுவோருக்கு அமுல் செய்வதே நல்லது' என்று விளக்கினார்.

### 'உடனேயே விலைகுறைத்தோம்'

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஒரு ஹோட்டல் உரிமையாளர் திரு. மு. பத்மநாதனை சந்தித்து, சீனி விலை குறைப்பு பற்றி கேட்டபோது, 'நீங்க லேட்டாகிட்டீங்க' என்றார்.

'காலையில் 'ஈழநாடு'வைப் பார்த்தேன். பட்ஜட் யோசனைகளில் சீனி விலை குறைப்பு பற்றி செய்தி வெளிவந்திருந்தது. ஹோட்டலுக்கு வந்ததும் உடனே எமது தரமான பானங்களினதும் இனிப்பு வகைகளினதும் மற்றும் 'ஐஸ் கிறீம்' விலைகளில் ஐந்து சதம் முதல் 25 சதம வரை குறைத்து, திட்டத்தை உடனேயே அமுல் செய்து விட்டோம்' என்று பெருமைப் பட்டார்.

### குடும்பப் பெண் கூறுகின்றார்

நாவலர் வீதியைச் சேர்ந்த திருமதி மாலினி கந்தசாமியை அடுத்து சந்திக்கின்றோம்.

'நல்ல பட்ஜட்' பீக்ஸை எடுத்து விட்டதால் எல்லாப் பொருள்களும நம் நாட்டுக்கு வந்துவிடும். தாராளமாகவும் கிடைக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக, மதுபான வகைகளின் விலைகளை அதிகரித்திருப்பது வரவேற்கக்கூடியது. விலையைச் சற்றுக் கூடுதலாகவே அதிகரித்திருக்கலாம். குடும்பப்பெண்களைப் பொறுத்தவரை உணவுப்பொருள்கள் குறைந்த விலையில் தாராளமாகக்கிடைக்க வேண்டும் என்றே விரும்புவார்கள். 300 ரூபா சம்பளம் பெறுவோரின் இலவச அரிசியை வெட்டுவது நியாயமானதாகப்படவில்லை. இதனை 500 ரூபாவாக அதிகரித்திருக்கவேண்டும். சீனிப் பங்கீட்டுமுறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சீனியின் விலையுருத்தல் இரண்டு ரூபாவாகக் குறைத்திருக்கலாம். வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க பலனுள்ள நடவடிக்கைகளை அரசு எடுத்திருப்பதும்; வரிச்சலுகைகள் வழங்கப்பட்டிருப்பதும் பாராட்டத்தக்கது" என்று அபிப்பிராயம் தெரிவித்தார்.

### "எங்கே சைக்கிள்?"

தினமும் தெல்லிப்பளையிலிருந்து பஸ்ஸில் யாழ்ப்பாணம் வரும் தனியார்துறை ஊழியர் திரு. செ. கந்தசாமி என்பவர் கவலையுடன் இப்படிக் கேட்டார்-

"300 ரூபாவுக்கு சைக்கிள் தரப்போவதாகக் கூறினீர்களே! 'பட்ஜட்'டில் அந்த மூச்சே இல்லையே!"

### ஆட்குறைப்பு ஏற்படாதா?

யாழ். வர்த்தகர் ஸ்தாபனமொன்றில் கடமையாற்றும் 'பியோன்' ஒருவரைச் சந்தித்தபோது எமது நிலை தர்ம சங்கடமாகிவிட்டது! பட்ஜட் பற்றி விளக்கமாகக் கூறுமாறு எங்களையே துருவத்தொடங்கிவிட்டார்! கூறினோம். முடிவில் அவர் கேட்ட கேள்வி.

"எங்களின் ஸ்தாபனத்தில் வேலைசெய்யும் அத்தனைபேருக்குமே 50 ரூபா சம்பள உயர்வு வழங்கவேண்டித்தான் வரும்! அப்படியானால் ஸ்தாபனத்துக்கு நஷ்டம் ஏற்படாதா? ஆட்குறைப்பு நிச்சயம் நடக்கும். நானும் பாதிக்கப்பட வேண்டியதுதான்!"

### 'மலாயன் பென்ஷனியர்'

"பீக்ஸை எடுத்துவிட்டார்களே. அந்த 65 சதவிகிதமும் போச்சு. எனது பென்ஷனை அநியாயமாக குறைத்துவிட்டார்கள்! சவூதி அரேபியாவிலிருந்து மகன் அனுப்பும் பணமும் பீக்ஸ் இல்லாமல்குறைந்துவிட்டது"-இப்படிக் கவலைப் பட்டார் பெயர் வெளியிட விரும்பாத மலாயன் பென்ஷனியர் ஒருவர்.

### காப்பிவிலை குறைந்தது

திடீரென ஒரு ஹோட்டலுக்குள் நுழைகின்றோம். காப்பிக்கு 'ஆடர்' செய்கின்றோம். 'பில்'லைக் கேட்கின்றோம். அந்த சூசியான காப்பியின் விலை ஐந்து சதம் குறைந்திருந்தது. இனிப்புப் பண்டங்களின் விலைகளிலும் சரிவு காணப்பட்டது!

'நாலுபேரை'யும் சந்தித்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்தோம். வழியில் நண்பர் ஒருவர் எம்மிடம் ஒரு கேள்வி தொடுத்தார்.

"பீக்ஸ் ரத்துச் செய்யப்பட்டதால் தங்கம் விலை குறையும் தானே?"

இல்லை என்று நாம் கூறவில்லை. நம்பிக்கையளித்தோம்.

### திருநெல்வேலி...

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

நெல்வேலியில் மாணிக்கம் கந்தையா என்பவரைக் கொலை செய்ததாக, இ. பொன்னன், பொ. அருமைநாயகம், பொ செல்வநாயகம், வை. சற்குணநாயகம் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணிகள் ரி. சோமசுந்தரம், எஸ். கே. மகேந்திரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினர்.

எதிரிகள் லைகமோசக் கொலைக் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

(க ஐ)

## நோய் தாங்காது தற்கொலை!

(நெல்லியடி)

தொய்வு நோயால் பீடிக்கப்பட்டிருந்த ஆபரண கடைத் தொழிலாளி, சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். அல்வாய் தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சின்னையா என்பவரே தற்கொலை செய்துகொண்டவராவர்.

வடமராட்சிமரணவிசாரணை அதிகாரி திரு எம். வி. புவனேந்திரன் விசாரணை நடத்தினார்.

சம்பவதினம் காலை 6 மணிக்கு சின்னையா நோயினால் கஷ்டப்பட்டாரென்றும், வைத்தியசாலைக்குப் புறப்படும்படி மனைவி கூறியபோது "இவ்வளவு நாளும் வைத்தியம் செய்து பார்த்தாகிவிட்டது. செத்துப்போனால் நல்லது" என்று அவர் கூறியதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மனைவி காலைச் சாப்பாட்டை எடுத்துச் சென்றபோது, அவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கிய நிலையில் காணப்பட்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

### உரியவர் யார்?

ஆண்கள் அணியும் கைக்கடிகாரம் ஒன்று கன்னாகம் பஸ் நிலையத்தில் டாக்டர் ஜி. ஜோர்ஜ் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு" அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

### புதிய தலைவர்

[கொழும்பு]

இலங்கைப் பல்கலைக் கழகக் கொழும்பு வளாகத் தமிழ்ச் சங்கத்தின் புதிய தலைவராக திரு. வி. ரி. தமிழ்மாறன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பிரஸ்தாப வளாக சட்டபீடத்து இரண்டாம் வருட மாணவரான இவர்சிறுகதை கவிதை கட்டுரை பேச்சுப் போட்டிகள் பலவற்றிலும் பங்கு பற்றிப் பரிசில்களைப் பெற்றுள்ளார்.

### இளைஞர்கள்...

[1ம்பக்கத் தொடர்ச்சி]

கள் இந்த நீதிமன்றத்திற்கு வந்து தங்கள் வரவைப் பதிவு செய்துகொள்ளவிருப்பதாகிறார்கள் என்றும் கூறினார். இதற்கு நீதிபதி அனுமதி வழங்கி அவர்களை நீதிமன்றத்திற்கு வந்து தங்கள் வரவைப் பதிவு செய்யுமாறு கூறினார்.

### பிணைபறிமுதலாகும்

இத்தினங்கள் விடுமுறை தினமாயிருந்தால் அடுத்தநாள் வரவைப் பதிவுசெய்யவேண்டும் என்றும் கூறிய நீதிபதி எதிரிகள் ஒவ்வொருவரும் 50 ஆயிரம் ரூபா பணமாகவோ அல்லது உறுதிப்பிணையாகவோ செலுத்தவேண்டுமென்றும் ஒவ்வொரு எதிரிக்கும் இருவர் பொறுப்பாகப் பிணைநிற்க வேண்டுமென்றும் தெரிவித்து குறித்த தினங்களில் நீதிமன்றத்திற்குஎதிரிகள் வராவிட்டால் பிணைபறிமுதல் செய்யப்படுமென்றும் கூறினார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்டபின் நீதிபதி எதிரிகளை பிணையில் செல்ல அனுமதித்து விசாரணையை இம்மாதம் 28ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

[க-அ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka